நேற்று சொன்னார்கள். நான் உடனே அது குறித்து அதிகாரிகளோடு தொடர்புகொண்டு நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறேன். மாண்புமிகு உறுப்பினர் இங்கே வந்து திடீரென்று தகவல் கொடுத்துவிட்டு தவறான தகவல் என்று சொல்வது விரும்பத்தக்கது அல்ல. திரு. உச்சி அவர்கள் சொன்ன குறைபாட்டின் அடிப்படையில் அதைக் களைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இரவு நேரங்களில் வழித்தடங்களை அனுமதிப்பது குறித்து அதிகாரிகளோடு கலந்துபேசி முடிவு எடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

2. தகவல் கோரல்— தொடர்ச்சி.

(ஆ) சிம்கோ மீட்டர்ஸ் நிறுவன தொழில் தகராறு குறித்து.

திரு. ரா. உமாநாத் : துணைத் தலைவர் அவர்களே, அடுத்த அலுவல்களுக்குப் போவதற்கு முன் நான் ஒரு சீரியஸ் அர்ஜன்ட் மேட்டர் உங்களின் கவனத்திற்கு சப்மிட் செய்கிறேன். உங்களுக்கு எம்பாரஸ்மென்ட் இருக்கலாம். அல்லது முன்னாலே இருக்கும் கனம் அமைச்சர்களுக்கு, அங்கத்தினர்களுக்கு இர்ரிடேட்டிங்காக இருக்கலாம். இர்ரிடேட்டிங், எம்பாரஸ்மென்ட் பார்த்துக் பிரயோசனம் இல்லை. நேற்று நான் சிம்கோ மீட்டர்ஸ் தொழிலாளர்கள் பற்றிச் சொல்கிறபோது சொன்னேன். பொது மக்களுக்கு எப்படி குண்டர்களால் ஆபத்து இருக்கிறது என்பதைப் பற்றிச் சொன்னேன். அது டிஸ்போஸ் ஆகிவிட்டது. இன்று போலீஸ் மூலம் அந்த இடத்தில் இந்த நிமிடத்தில் டேஞ்ஜர் ஏற்பட்டு இருக்கிறது. அங்கே கேட்டின் அருகே இருக்கும் தொழிலாளர்கள் மீது எந்த நேரத்திலும் லத்தி சார்ஜ் நடத்தலாம், எந்த நேரத்திலும் பைரிங் நடத்தலாம், அப்படிப்பட்ட சிட்சுவேஷன் அங்கே இருக்கிறது. நேற்று அந்தத் தொழிலாளர்கள் வேலைக்குச் செல்வது என்று சொல்லி கேட்டிற்குச் சென்றார்கள். வேலை நிறுத்தம் செய்வது என்பது தொழிலாளர்களின் உரிமை. அவர்கள் உள்ளே போய் வேலை செய்யவில்லை என்றால் அது ஸ்டே இன் ஸ்ட்ரைக், வெளியே இருந்து வேலைக்கு போகவில்லை என்றால் அது ஸ்டே ஆப் ஸ்ட்ரைக். அந்த உரிமையில் தலையிட போலீசுக்கு உரிமை இல்லை. (மணியடிக்கப்பட்டது) நான் முன்பே சொன்னேன். உங்களுக்கு எம்பாரேசிங்காக இருக்கும் என்று, அங்கே ஒரு பைரிங் நடக்கும் சிட்சுவேஷனை வைத்துக்கொண்டு நான் இங்கே சும்மா உட்கார்ந்து கொண்டு இருக்க முடியாது. ஐ கான்னாட் டாலரேட்; ஆகவே, கிளியராகச் சொல்கிறேன்........

1979, மார்ச் 6]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் விவரமாக சொல்லிவிட்டீர்கள். உங்களுக்கு வந்த தகவலை முதலில் தலைவரிடம் தெரிவித்து அவருடைய அனுமதியைப் பெற்றுத் தான் நீங்கள் அதை இங்கே சொல்லலாம். உங்களுக்குத் தெரிந்ததை தலைவருக்குத் தெரிவித்தபின் இங்கே எழுப்புவது தான் முறையாக சபை நடத்துவதற்கு உதவியாக இருக்கும். எல்லோரும் தாங்கள் சொல்வது போல் எனக்கு இப்போது தான் தகவல் வந்தது என்று எழுந்து பேச ஆரம்பித்தால் சபை எப்படி முறையாக நடத்தமுடியும் என்பதை நீங்களே தான் எனக்குச் சொல்ல வேண்டும்.

திரு. ரா. உமாநாத் : எனி டைம் பைரிங் மே டேக் பிளேஸ் அட் தி கேட்..... நேற்று கூட........

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் எங்களுக்கு 'எம்பாரஸ்மென்ட்' இருக்கிறது என்று சொன்னார்கள். எங்களுக்கு 'எம்பராஸ்மென்டும் இல்லை; இரிட்டேஷனும் இல்லை' ஆனால் சட்டசபை நடவடிக்கைகளை நடத்துவதற்கு என்று நாம் சில விதிமுறைகளை வகுத்து, அஜெண்டா போட்டு, அதன் படி நடத்துகிறோம். அதைப் பொருட்படுத்தாமல், என்ன தகவல் வேண்டுமென்று விரும்புகிறார்களோ அதைப்பற்றி அரசுக்கு தெரிவிக்காமல் இப்படி திடீரென்று ஒரு விஷயத்தைப் பேசுவதால் அவர்கள் எதிர்பார்க்கும் பலனும் அரசாங்கத்திலிருந்து கிடைப்பது கடினம்: அதே நேரத்தில் அவையிலே மற்ற அலுவல்களைக் கவனிக்கின்ற நேரமும் வீணாகும். அவர்களுக்குக் கிடைத்திருக்கிற தகவலை அரசாங்கத்திற்குத் தெரிவித்து, உரிய பரிகாரம் தேடிக் கொள்வதில் எங்களுக்கு எந்தவிதமான எம்பராஸ்மெண்டும் இல்லை. இரிட்டேஷனும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : அமைச்சர் அவர்கள் விதிமுறைகளைப் பற்றிச் சொன்னார்கள். நேற்று தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்திற்கு அடிப்படையான காரணத்தைக் குறிப்பிட்டு, தகுந்த நடவடிக்கை எடுக்கிறோம் என்று சொன்னார்கள், அது எந்த விதிமுறையின் கீழ் (மணியடிக்கப்பட்டது). ஆகவே, நான் சொல்வதைச் சொல்கிறேன். நீங்கள் என்ன சொன்னாலும் உட்காரமாட்டேன். நேற்று தொழிலாளர்கள் உள்ளே போகப் போனார்கள். போலீசார் அவர்களைத் தடுத்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒன்றைச் சொல்லி விடுகிறேன். உங்களுக்கு கிடைத்த தகவலை வைத்து, அதில் அரசாங்கம் என்ன என்ன நடவடிக்கை எடுக்க வேண்டு

மென்று எழுதிக் கொடுத்தால் அமைச்சரிடம் கொடுத்து, தேவையான தகவல்களைச் சேகரித்து அவைக்கு அளிக்க முடியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அனுபவம் வாய்ந்தவர்கள்; பாராளுமன்ற நடைமுறை நன்றாகத் தெரிந்தவர்கள். அவர்கள் இங்கே வந்து, விதிமுறைகள் எப்படி இருந்தாலும், நான் என்ன வேண்டுமானாலும் சொல்வேன்; என்னை பேசக்கூடாது என்று தடுக்கக்கூடாது என்று சொல்வது சரியல்ல. விதிமுறைகளுக்கு ஏற்றதும் அல்ல. தங்களைப் போன்ற அனுபவம் வாய்ந்த உறுப்பினர்கள் அவைத் தலைவருக்கு உதவியாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் இதுவரை குறிப்பிட்டது போதும், ஏதாவது இருந்தால் எழுதிக் கொடுங்கள்.

திரு. ரா. உமாநாத்: நீங்கள் என்ன சொன்னாலும், நான் சொல்ல நினைத்ததைச் சொல்லியே தீருவேன். இந்த அரசாங்கம் இங்கே சொல்வது ஒன்றாக இருக்கிறது, வெளியே நடப்பது ஒன்றாக இருக்கிறது. தொழிலாளர்களிடையே இன்றைக்கு மிகப் பெரிய பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது; பதட்டமான நிலை உருவாகியிருக்கிறது. நேற்று அவர்கள் உள்ளே போகும்போது போலீசார் தடுத்தார்கள். ஆண்களும் பெண்களும்.....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் தொடர்ந்து இப்படி நடந்துக்கொண்டால் சட்டசபையை ஒழுங்காக நடத்த முடியாது. இன்னமும் தொடர்ந்து பேசிக்கொண்டு தான் இருப்பேன் என்று சொல்வதாக இருந்தால் நான் அவைகளை எல்லாம் நீக்க வேண்டிய கட்டாயம் ஏற்படும். அதுதான் கடைசி ஆயுதம். வேறு வழியில்லை. அனுபவம் வாய்ந்த உறுப்பினரான தாங்கள் அந்த கடைசி ஆயுதத்தைப் பயன்படுத்தும்படி நடந்துகொள்வது சரியல்ல.

திரு. ரா. உமாநாத்: நீங்கள் என்ன வேண்டுமானாலும் செய்யலாம்; நான் சொல்லக் கூடாதா.?

There must be some sense in it. It will lead to any consequence there;

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதைப் போல ஒவ்வொருவரும் பேசினால் சபையை எப்படி நடத்த முடியும்?

திரு. ரா. உமாநாத்: அரசாங்கத்தின் சார்பாக உறுதி கொடுத்தார்கள். எதிர்க்கட்சித் தலைவர்களை அழைத்து பேசுகிறோம் என்று சொன்னார்கள், ஏற்கெனவே பேசினோம்............

1979 மார்ச் 6]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தொடர்ந்து நீங்கள் பேசுவதாக இருந்தால் எல்லாவற்றையும் நீக்க வேண்டி வரும்.

திரு. ரா. உமாநாத்: நீங்கள் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். அதிகாரம் இருக்கிறது. You cannot help it. They are not somebody else property. I cannot tolerate it. If you want to take action against me, take it. நான் சொல்வதைச் சொல்லித்தான் தீர வேண்டும். அங்கே 'ஃபயரிங்' நடக்கும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. எந்த நிமிடத்திலும் துப்பாக்கி வெடிக்கும். அதிலே இரண்டு பேர் செத்து விட்டால் என்ன செய்வது? இந்த விளைவுகளைப் பற்றி எல்லாம் நான் பேச வேண்டியிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் முக்கால் வாசி பேசிவிட்டீர்கள் என்று கருதுகிறேன். தயவு செய்து உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் உணர்ச்சிவசப்பட்டு பேசுகிறார்கள். அவர்கள் ஒரு முடிவோடு வந்திருக்கிறார்களோ என்று நான் சந்தேகப்படுகிறேன். நான் அவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நேற்றைய தினம் இந்தப் பிரச்சினை சம்பந்தமாக ஆளும் கட்சித் தரப்பிலே இருந்து கூட கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்தார்கள். ஆகவே, இந்த அரசு அக்கறை செலுத்தாமல் இருக்கிறது என்று கருதுவது சரியல்ல. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஏதாவது தகவல் கிடைத்திருந்தால், அதை முறைப்படி சட்டமன்றத்திற்குக் கொண்டு வருவதைத் தவிர, சட்டமன்றம் நடக்கும்போது இப்படி திடீரென்று எழுந்து கூறக்கூடாது என்பதை மட்டும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன்: அமைச்சர் விதியைப்பற்றி மட்டும் பேசுகிறாரே தவிர கொடுத்த வாக்குறுதி என்னவாயிற்று? 10 தினங்களுக்கு முன்னாலே எல்லா எதிர்க்கட்சித் தலைவர்களையும் அழைத்து பேசினார்களே, அது என்னவாயிற்று? மேலும்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விதியை அமைச்சர் மட்டும் உருவாக்குவது அல்ல. இருக்கிற விதியை மாற்ற வேண்டுமென்றால் ரூல்ஸ் கமிட்டிதான் அது பற்றி முடிவு செய்ய வேண்டும். விதியிலே என்ன இருக்கிறதோ அதை நாம் காப்பாற்றியாக வேண்டும்.

திரு. மு. கருணாநிதி: துணைத் தலைவரவர்களே, இந்தப் பிரச்சினை குறித்து இந்த அவையிலே பலமுறை பேசப்பட்டு விட்டது. நண்பர் உமாநாத் அவர்கள் குறிப்பிட்டதைப் போல எதிர்க்கட்சித் தலைவர்கள் அனைவரையும் சந்தித்து, அவை முன்னவர் அவர்களும் தொழிலாளர் நல அமைச்சர் அவர்களும் கூடி பேசி, எடுத்த முடிவுகள் நிறைவேற்றப்பட வில்லை. அதுவும் இந்த மாமன்றத்திற்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. என்னென்ன பேசப்பட்டது என்றும், பேசியவை எல்லாம் நிறைவேற்றப்பட வில்லை என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

[முற்பகல் 11-20]

இன்றிருக்கின்ற சூழ்நிலையில் உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்வதற்கு தொழிலாளர்கள் உள்ளே செல்கிறார்கள். அவர்களுக்கு அந்த உரிமை உண்டு. ஆனால் போலீசார் அவர்களைத் தடுக்கிறார்கள். அவ்வாறு தடுக்கக்கூடாது என்று போலீசாருக்கு ஆணை பிறப்பிப்போம் என்று சொல்லுகின்ற அளவிலே, 'நாங்கள் முதலாளிகள் பக்கமல்ல, தொழிலாளர்கள் பக்கம் தான்', என்கிற அளவிலே அவர்கள் உள்ளிருப்புவேலை நிறுத்தம் செய்வதை தடுக்க மாட்டோம் என்று அரசு ஒரு உறுதி மொழியை அளிக்குமா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, நான் முதலிலேயே சொன்னது என்னவென்றால் என்ன சம்பவங்கள் நடந்திருக்கின்றன என்பதற்கு சரியான தகவல்கள் இல்லை என்பதுதான். இந்தப் பிரச்சினையை மாண்புமிகு உறுப்பினர்கள் திடீரென்று கிளப்புகிறார்கள். ஆகவே இது என்ன நிலைமை என்று தெரியாமல் மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் கேட்கின்றபடி ஒரு உறுதிமொழியை எப்படி கொடுக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, சட்டசபையிலே சில விதிமுறைகள் இருக்கின்றன. அவற்றின்படி இவற்றைக் கொண்டுவந்தால் நாங்களும் தகவலைத் தெரிந்து கொண்டு தயாரான நிலையில் இருந்து பதில் சொல்ல வாய்ப்பாக இருக்கும். அப்படியில்லாமல் இந்த மாதிரி நிலைமைகளை உருவாக்கினால் அது எல்லோருக்கும் பின்னாலே கஷ்டத்தை ஏற்படுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் இந்தப் பிரச்சினையை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருப்பதால் அரசு நிச்சயமாக தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இத்தோடு இது பற்றிய விவாதம் இனிமேல் வேண்டாம்.

[1979 மார்ச் 6]

திரு ரா. உமாநாத் : * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தயவுசெய்து அமருங்கள். நீங்கள் சொன்னீர்கள். அதன் பிறகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் கேட்டார்கள். அதற்கு மாண்புமிகு அமைச்சரவர்களும் பதில் சொல்லிவிட்டார்கள். ஆகவே இனி மேல் ஏதாவது சொல்ல வேண்டும் என்றால் எழுத்து மூலமாகத் தாருங்கள். நாளைக்கு வேண்டுமானால் ஒத்திவைப்புத் தீர்மானமோ அல்லது கவன ஈர்ப்புத் தீர்மானமோ கொடுங்கள். அப்படிக் கொடுக்க வேண்டுமேயல்லாது இப்படி திடீரென்று கிளப்புவது முறையானதாக இருக்காது. நான் அடுத்த நிகழ்ச் சிக்குச் செல்லவேண்டும். தயவுசெய்து அமருங்கள்.

திரு ரா. உமாநாத் : * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு உமாநாத் அவர்கள் இப்படிச் சொல்வது சரியானதாக இருக்காது. அது முறையானது அல்ல.

திரு ரா. உமாநாத் : * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தயவுசெய்து அமருங்கள்.

திரு ரா. உமாநாத் : * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் இவ்வாறு நடந்துகொள்வது சரியல்ல. அமருங்கள்.

திரு ரா. உமாநாத் : * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் பதிலளித்ததற்குப் பின்னாலே திரு. உமாநாத் பேசியது அத்தனையையும் நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

திரு ரா. உமாநாத் : * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. உமாநாத் அவர்கள் இனிமேல் பேசுவது அனைத்து அவை நட வடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெறும் அடுத்து அரசினர் சட்ட முன்வடிவு.

(கூச்சல், குழப்பம்)

(*) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. உமாநாத் * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான் பேசக் கூடாது என்று சொல்லியதிலிருந்து திரு. உமாநாத் தொடர்ந்து பேசியது அத்தனையையும் நீக்க உத்தரவிடுகிறேன். அடுத்து, அரசினர், சட்ட முன்வடிவுகள்.

(கூச்சல், குழப்பம்)

(7) அரசினர் சட்ட முன்வடிவு.

தனியார் வனங்களைப் பாதுகாத்தல் (கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நீட்டித்தல்) சட்ட முன்வடிவு. 1979

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு தனியார் வனங்களைப் பாது காத்தல் (கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நீட்டித்தல்) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்த அனுமதி கோரு கிறேன் .''

(கூச்சல் — குழப்பம்)

(2) தகவல் கோரல்—தொடர்ச்சி.

(ஆ) சிம்கோ மீட்டர்ஸ் நிறுவன தொழில் தகராறு குறித்து (தொடர்ச்சி).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விதி 86—ஐ மாண்புமிகு சட்ட மன்ற உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். சபையின் இதர அலுவல்கள் தொடர்ந்து நடைபெறுவதற்கு உறுப்பினர்கள் ஒன்று உதவியாக இருக்கவேண்டும். அல்லது அவர்கள் வெளிநடப்பு செய்யலாம். அப்படியின்றி அவை நடவடிக்கைகளை தடை செய்து கொண் டிருப்பதன் காரணமாக அவர்களை அவையிலிருந்து அகற்று வதற்காக ஒரு சூழ்நிலைக்கு என்னை ஆளாக்காமல் அவர்கள் ஒன்று வெளியேறலாம் அல்லது அமைதியாக அமர வேண்டும்.

(கூச்சல், குழப்பம்)

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் ணகிங்க அகற்றப்பெற்றது.